# GMR-ன்

# படைப்பில்

## ராம் பப்ளிகேஷன்
## பெருமையுடன்
## வெளியீடும்

- GMR-ன் கவிதைத் தொகுப்பு
- மாட்டிக்காதே மங்கப்பா
- நீதியின் முன் ஒரு நிரபராதி

(GMR-ன் நெஞ்சை உலுக்கும் நீதிமன்ற அனுபவம்)

- தகவல் அறியும் உரிமைச்சட்டம்

(திறமையாக பயன்படுத்த பயிற்சியுடன்)

- நீதிக்கூத்து
- ஒரு முட்டாளின் சுயசரிதம்
- சட்டம் ஓர் அறிமுகம்

புலமை வேங்கடாசலம் பி.ஏ பி.எல்(மூத்த வழக்கறிஞர் நோட்டரி பப்ளிக்)
மற்றும்
மனோகர்ராஜ் பி.ஏ எல்.எல்.பி
ஆகியோரின் படைப்பில்
மாதமிருமுறை வெளிவரும் துணிவான சட்டப்பத்திரிகை

# நீதிபதி

## படிக்க தவறாதீர்கள்



# GMR-ன்

# எளிய கவிதைகள்
# தொகுப்பு-1

Published by
RAM Publictions,42/P, A.A. Street, Salem-1

விலை ரூ 42/-



இந்திய உறவுகள் உயர்வுப் பெற-
உணர்வுகள் உயிர்தெழ!
உறுதியாய் வாழ்ந்து உயிர் நீத்தோருக்கு-
இவை அர்ப்பணம்!
உலகம் சமநிலைப் பெற, உண்மையில் உழைத்தோருக்கு
இக்கவிதைகள்-சமர்பணம்!
உருளும் உலகில் உயிருடன் இன்னும்-
ஆங்காங்கே சில மனித
தெய்வங்கள் மனிதனைக் கண்டு
மறைந்து வாழ்வது நிதர்சனம்!
இதோ என் கவிதைப் பூக்களால்- உங்கள்
பாதங்களை பூஜிக்கின்றேன்!-வாருங்கள்,
வந்து வழிக்காட்டுங்கள் எங்களுக்கு!
வாழ வழித்தெரியாமல் வாடுகின்றோம்!
அழிவுப்பாதையில் அதிவேகமாய் செல்லும்- எங்கள்
பிள்ளைகளை அரவணைத்து வழிக்காட்டுங்கள்!



வாய்ப்பிருக்கும் போது அது எப்படி முழுமையான குற்றமும், தவறுமாகும்? எப்படி கடுமையான தண்டனை வழங்கிட முடியும்?

ஏன் குற்றங்கள் அதிகரித்து வருகிறது? ஏன் சுயநலமில்லாத நல்ல தலைவர்கள் நாட்டிற்கு கிடைப்பதில்லை? எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க, எல்லோரும் மகிழ்வுடன் வாழ என்னதான் வழி? எல்லாம் தலைக்கு மேலே போயிடுச்சி! இனி இந்த நாட்டை யாராலும் காப்பாத்த முடியாது! என்கிறீர்களா? ஒருவகையில் சரிதான், ஆனாலும் நாளை இந்நாட்டை ஆளப்போகும் இன்றைய இளைய தலைமுறையின் சிந்தையில் இச்சீரிய கருத்துக்களை மெல்ல புகுத்தி னால் நாளை பாரதம் பாரினில் சிறக்கும் என்ற ஒரு அற்ப ஆசைதான். வேறொன்றுமில்லை! நமது நம்பிக்கை நட்சத்திரங்களும் இன்றைய இளைய தலைமுறைகளுமான நமது பிள்ளைகள் வாழ்வில் எல்லா சுகங்களையும் பெற்று மகிழ்வுடன் வாழ வழி காட்டுவோம் வாருங்கள்!

## நன்றி

இன்று எங்கு நோக்கினும் பிரச்சனைகள்!, எதற்கெடுத்தாலும் வேலைநிறுத்தம்!, சாலை மறியல்!, உண்ணாவிரதம்!, இத்துறை முழுக்க முழுக்க சிறப்பாக செயல்படுகிறது என்று கூறி மகிழ ஒரே ஒரு துறைக் கூட இல்லையே!

இவர் முழுக்க முழுக்க சிறந்த மனிதர், இவர் எக்காரணத்திற்காகவும் பிறருக்கு தீங் கிழைக்க மாட்டார் என்று விரல் விட்டு எண்ண ஒரே ஒரு நபர் கூட நாட்டில் இல்லை என்று நினைக்கையில் ஆறறிவுப் படைத்த மனித உள்ளம் நிச்சயம் பதறும் என்பது நிஜம்.

ஆனால், நாம் ஆழமாக சிந்திக்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது. நமது சட்டங்கள், கொள் கைகள் மற்றும் இயற்கை நீதி கோட்பாடுகளின் படி இச்சமுதாயத்தில் நாம் தவறு, குற்றம் என்று கூறும் ஒவ்வொன்றிக்கும் அதற்கு இணையான, எதிர்மறையான நியாயங்கள் இருக்கத்தான் செய்கின்றது என்பதை யாராலும் மறுத்திடல் இயலாது.

நாம் குற்றம் என்று கூறும் ஒவ்வொரு செயலுக்கும், நியாயம் என்று கூற போதிய



நாட்டிலே நல்ல தலைவர்களில்லை!

காகிதத்திலே தள்ளாடுது நீதி!
நீதியை தேடி அலைகின்றோம்- நாயாய்,

நாதியில்லாமல்!

வாருங்கள், வந்து வழிக்காட்டுங்கள் எங்களுக்கு!

நல்லோர் சிலரும், நன்றிகெட்டோரென்று -எங்களை

நடுவீதியில் நாதியின்றி விடுவது நீதியோ!

எங்கள் குழந்தைகளை காப்பாற்றுங்கள்!

இக்கவிதைகள்-உங்களுக்கும் சமர்பணம்!

நான் உன்னை தேடி அலைபவனில்லையென்றாலும்-

உன்னை நம்பி வாழும் என் மக்கள் ஏராளம்!

நீ உள்ளது உண்மையென்றால்

எங்கள் குழந்தைகளை காப்பாற்று!-

என் மக்கள் போற்றும் உன்னத

தெய்வங்களே!-

இக்கவிதைகள்-உங்களுக்கும் சமர்பணம்!

## தொடர்பிற்கு

163/6 சின்ன வண்டிச் சோலை,

வெலிங்டன் பேரக்ஸ், நீலகிரி- 643231

தொலைப்பேசி எண்:-0423-2201891

E-mail :- neethipathi.india@ gmail.com

# அச்சம்

மரணம் என்னை நெருங்கிக்கொண்டிருக்கிறது
**அச்சமில்லை**
ஏனென்றால் அது இயற்கைநீதி-ஆனால்
**அஞ்சுகின்றேன்!**
அந்த அற்புத விடியலை என் இளையத்
தலைமுறைக்குக் காட்டுமுன் -நான் இருளில்
மறைவேனோ?
நான் மறைந்தாலும் தொடரட்டும் உங்கள் பயணம்
விடியலை-நோக்கி!
விறுக்கென்று செயல்படு!
விடியட்டும் பாரதம்!

# அழிவின் ஆரம்பம்

புகழை தலைக்கு கொண்டு போகாதே!
அவமானத்தை இதயத்திற்கு கொண்டு போகாதே!
அது அழிவின் ஆரம்ப நிலை



இவர்களை மாமனிதர்களாக்க வேண்டாம்-
குறைந்தது

மனிதர்களாகவாவது மாற்று!- உன் படைப்பை
உருப்படியாகச் செய்!

சிந்தித்துச்செயல்படும் சீரிய மக்களாக்கு-என்
நாட்டவரை!

அகிலம் புகழும் நல்ல தலைவர்களை தந்திடு-என்
நாட்டிற்கு!

நீதிபாதிகளையெல்லாம், சிறந்த-
நீதிபதிகளாக்கு!- இந்த

இளையச் சமுதாயத்தை உன் கரத்தில்
ஒப்படைக்கின்றேன் -காப்பாற்று!

இச்சமுதாயச் சீரழிவில் சிக்கி-சீரழிந்து விடாமல்!

நீ உள்ளது உண்மையென்றால் எல்லோருக்கும்
எல்லாம்-கிடைக்க

வழியைக் காட்டு!-

உலகம் போற்றும் உன்னத தெய்வமே!

# வழிக்காட்டு ஆண்டவனே

தீயவை அழிய நல்லவைத் தழைக்க, சீரிய
வழிகளை- சொல்லிச் சொல்லி

மாண்டுப் போயினர் பல மாமனிதர்கள்!

அவர்கள் சொல்லாத பொன்மொழிகள்
ஏதுமில்லை-புதிதாய் கூற,

அவைகளை கேட்டும், கேட்காத மனித
விலங்குகள்-

மாண்டுத்தான் போகின்றனர் பரிதாபமாக-
யாருக்கும் பயனின்றி!

அந்தோ பரிதாபம்! எதற்காக அம்மனித
தெய்வங்கள்-கதறியதோ

அத்தீயவை மட்டும் பல்லாயிரம் ஆண்டுகளாகியும்-
மாண்டு போகவில்லை!

மாறாக வளர்ந்து அழிக்க முடியாத-
நிலையடைந்துவிட்டது-

சிந்தனையின்றி, சுயநலத்தில் திரியும்-மனித
விலங்குகளால்



# சுயசிந்தனை

திட்டங்கள் தீட்டினாலும்,

சட்டங்கள் இயற்றினாலும்

சத்தியமாய் நடக்கப் போவது ஏதுமில்லை - நீ
சிந்திக்காத வரையில்!

சுகம் வேண்டுமா உனக்கு?

முதலில் சுயமாக சிந்திக்க பழகு!

தனக்கு, தனக்கு என்கிறாயே!

தந்திரமெல்லாம் செய்கிறாயே!

நெஞ்சைத் தொட்டுச் சொல்-நிம்மதி உண்டா
உனக்கு?

சிந்திக்க அழைக்கிறேன் வா

சீரோடும், சிறப்போடும் வாழலாம் வா!

# புத்தி

புத்தி சொல்ல புதிதாய் ஏதுமில்லை,

சொல்லியதையே திருப்பி சொல்லி என்னப்பயன்?

உண்மை ஊரறியும்.

உணர்விருந்தால், எழுந்து வா

# மகிழ்ச்சி

இதயங்கள் துடிப்பது - மகிழ்ச்சிக்காக!

செய்யும் செயல்கள் யாவும் - மகிழ்ச்சிக்காக!

வருமானம் ஈட்டுவதும் - மகிழ்ச்சிக்காக!

திருமணம் செய்வதும் - மகிழ்ச்சிக்காக!

குழந்தைகள் பெறுவதும் - மகிழ்ச்சிக்காக!

கோயில் குலம் செல்வதும் கூட-
மகிழ்ச்சிக்காக!

மனிதன் பிறந்து மறையும் வரை- ஒவ்வொரு

அசைவும்- அந்த மகிழ்ச்சிக்காக!

அந்தோ- பரிதாபம்- மனிதன்!

சாகும் வரை கிடைக்காமலும்

கிடைத்தால் நிலைக்காமலும் போவது

இந்த மகிழ்ச்சி தான்!



# நீதி

மானிட மகிழ்ச்சி-அதை நிர்ணயிப்பது- நீதி!

அது தடம் புரளும் போது கேட்க இருக்க
வேண்டும்- நாதி!

வழக்குத்தொடுத்து விட்டு வாய்தா கேட்கிறார்-
வாதி!

வழக்கை தயாரித்து, வாதாடுவதா-நீதி!

வெறும் காகிதத்தில் தள்ளாடுது-மீதி!

பொய்சாட்சியில் தடுமாறுது-பாதி!

பூஜ்ஜியமான காரணத்தை ஏன் மிகைப்படுத்த
வேண்டும்-ஊதி!

திருந்த மறுப்பதேன் இத்தனையும் -ஓதி!

நீ திருந்தி, அனைவரையும் திருத்தி புதிய பாரதம்
படைத்து-சாதி!

# நம்பிக்கை

வாய்மை வெல்லும் என்றெண்ணி நம்பிக்கையுடன்
நீதிமன்றம் சென்றேன்!
அங்கு வாய்மை வெல்லவில்லை-மாறாக
வாய்தாவே வெல்கிறது-வக்கிரபுத்தி வெல்கிறது-
விரக்தியுடன் திரும்பினேன்!

# மதிகெட்ட மானிடா

வாழ்க்கை மாயையென்று மனதார அறிந்தும் -
அதை கண்டு மயங்கும் மதிகெட்ட மானிடா
மறந்தும் உனக்கு புத்தி-சொல்லேன்!
மனமிருந்தால் மாறி வா!
மதியிருந்தால் பறந்து வா
உண்மையெல்லாம் உன் மனமறியும்!



# அருள் புரிவாய் ஆண்டவனே

என் இளைய தலைமுறையை இனிதே வாழ
செய்யும் உன்னத எண்ணத்தை தவிர; வேறு எந்த
ஆசையும் என்னுள் நுழையாமல் காப்பாய் உலகம்
போற்றும் உன்னத தெய்வமே- நீ உள்ளது-
உண்மையென்றால்!

அற்ப ஆசைகளுக்கு அடங்கிடாத- உன்னத
இலக்கை மட்டும் உள்ளத்தில் கொண்டு-
உறுதியாய் உழைத்திட- மனதில் உறுதியை
மறுக்காமல் தந்திடுவாய்- உலகம் போற்றும்
உன்னத தெய்வமே- நீ உள்ளது-
உண்மையென்றால்!

என் இதய கனவை உணர்வோடு புரிந்துக்
கொண்டு -ஒத்துழைக்க என் மானிட
சகோதரர்களுக்கு ஆசி வழங்கி-எல்லோருக்கும்
எல்லாம் கிடைக்க வழிக்காட்டுவாய் உலகம்
போற்றும் உன்னத தெய்வமே- நீ உள்ளது-
உண்மையென்றால்!

# மொழி

நீதிபதியும் ஆங்கிலத்தில்- அரைகுறை

வாதாடும் வழக்கறிஞரும் ஆங்கிலத்தில்
அரைகுறை

வழக்கு தொடுத்தவரோ வாசற்படியில்
ஆங்கிலத்தில் பூஜ்ஜியமாய்-ஆனால் அனைவரும்
அறிவர் தாய்மொழியாம் தமிழை!

வாதாடினாலென்ன வாயா வலிக்கும்?

வாதத்தை தங்க மொழி தமிழில் வைத்தால் தரம்
தாழ்ந்து போகுமோ?

தாய்மொழியாம் தமிழை தெரியாது என்று
கூறுவதால் என்னடா பெருமை!

உன் தாயையே உனக்கு தெரியாது என்று
சொன்னால் பெருமையோ உனக்கு!

தரம் கெட்ட சிந்தனைக்கு என் மலர் வளையம்



# நல்ல நீதிபதி

பார்வையில் இருக்க வேண்டியது-கருணை!

பேச்சிலே இருக்க வேண்டியது-அமைதி!

பழக்கத்திலே இருக்க வேண்டியது-பணிவு!

ஆலோசகராக இருக்க வேண்டியது-சட்ட புத்தகம்!

சிந்தையில் இருக்க வேண்டியது-சுய அறிவு!

மனதிலே இருக்க வேண்டியது-தன் முன் நீதிக்காக
நிற்போரை தன் குழந்தைகளாக பாவிக்கும்
மனோபாவம்!

பரந்திருக்க வேண்டியது- பகுத்தறிவு!

அடங்கியிருக்க வேண்டியது-ஆணவம்!

ஒழிக்கப்படவேண்டியது- ஆசை!

இருக்கவே கூடாதது- அச்சம்!, பாராபட்சம்!

இருக்கவேண்டியது-ஒரு நிரபராதிக்கூட
தண்டிக்கப்படக் கூடாது என்ற எண்ணம்!

புதைக்கப்பட வேண்டியது -சுயநலம்!

புரிந்துக் கொண்டால் நீதான் நல்ல நீதிபதி!

# விவசாயம்

விவசாய நிலமெல்லாம் வீடாக! விலைவாசியோ
விண்ணை முட்ட! விடிந்தால் வீதியில் விரைவில்
பிச்சையெடுக்க தயாராகுங்கள்! இதுதான் விதி
என்றால், எங்கே, என்ன ஆனது- உன் மதி?

# உரிமை

உரிமை-அது உயிரை விட மேலானது!

உரிமை இழந்த உயிர்-வெறுமையானது!

பிறர் காலில் விழுந்து வாழ்வது-கலங்கமானது!

கைகட்டி வாழ்தல்-இழிவானது!

தான்தோன்றிதனமாக வாழ்வதல்ல உரிமை
என்பது!

சட்டத்தைத் தெரிந்துக்கொண்டு வாழ்தலே
உயர்வானது!



# மழை

கருமேகம் சூழ்ந்துக் கொண்டு, பருவமழை
பவ்வியமாய் -பெய்ய!

பக்குவமடைந்த மனிதனொருத்தன்
“ச்சீ” என மழையை தொல்லையாய் சபிக்க-
கண்டேன்!

வெள்ளியாய் விழுந்த மழைநீர்-ஒருபுறம் சேற்றிலே
கலந்து-நிறம் மாறி செல்ல கண்டேன்!

மாசில்லாமல் மண்ணில் விழுந்த மழை நீர்-
சாக்கடையில் கலந்து பயனில்லாமல் போக
கண்டேன்!

சுகமாய் கைவீசி நடந்த மக்கள்-மழை குளிரால்
நடுங்க கண்டேன்!

ஓடியாடி விளையாடும் குழந்தைகள் ஒரு ஓரமாய்-
ஒதுங்கி கிடக்க கண்டேன்.

சுதந்திரமாய் சுற்றி திரிந்த மக்கள்
சுறுசுறுப்பின்றி-வீட்டிலே முடங்கியதை வியப்பாய்
கண்டேன்!

விறுக்கென வந்த கோபத்தில்- கொட்டும் மழை
மேகத்தை கேட்டேன் ஒரு கேள்வி!

“உன்னை நாங்கள் வெறுக்கின்றோம்-
உனக்கென்ன வேலை இங்கு?

உன்னை உருக்கி நீ தரும் நீர் அங்கே பார்

சாக்கடையில் ஓடுகிறது, இங்கே பார் சேற்றிலே
கலந்து உருதெரியாமல் போகிறது!

நீ மழையாய் பெய்து என்ன பயனென்றேன்?”

“மடையா! அங்கே பார் என் வருகையை
எதிர்பார்த்து காத்திருந்து என்னிடம்
தலைவணங்கி சிரிக்கும் -பயிர்களை!

என்னை வருத்தி நான் கொடுக்கும் தண்ணீரை
உள்வாங்கி கொண்டு சாக்கடை நீராய்
வெளியேற்றும் சாக்கடைகளை பற்றிய கவலை
எனக்கில்லை.

எனது வருகை, எனக்காக காத்திருக்கும்
காலியாகவுள்ள குடிநீர் தொட்டிகளுக்காகவும்

வறட்சியால் வாடும் பயிர்களுக்கும்தான்!



# மனித மனம்

சட்ட புத்தகங்களை புரட்டினேன் -
சட்டத்தை தெரிந்து கொண்டேன்

நீதிமன்றம் சென்றேன் – நீதி நிலவரம்
தெரிந்து கொண்டேன்.

ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தேன் –என்னை
அடக்கியாள கற்றுக் கொண்டேன்.

அற்பமான ஆசைகளை துறக்க
ஆரம்பித்தேன்- வாழ்க்கை தத்துவத்தை
புரிந்துக்கொண்டேன்

ஆனால் என்ன செய்தால் மனித
இதயங்களை அறிந்து கொள்ளலாம் என்று
புரியாமல் தவிக்கின்றேன்.

# சட்டம்

உணர்வுள்ளவர்களுக்கு-இது உயிர்
உணர்வற்றவர்களுக்கு- வெறும் காகிதம்

சட்ட தாகமுள்ளோருக்கு-இது ஜீவநீர்
சராசரி மனிதனுக்கு -சாக்கடைநீர்

சித்தம் தெளிவுள்ளோருக்கு- இது சித்தாந்தம்
புத்தி பேதலித்தோருக்கு-இது பொட்டல காகிதம்

சத்தியத்தை நினைப்போருக்கு – இது வேதம்
நித்தம் நீதியை வெறுப்போருக்கு -இதுதான் வதம்

உத்தமர்களுக்கு – இது உன்னதம்
மத்தவர்களுக்கு-இது சங்கடம்

நீதிக்கு துடிப்போருக்கு- இது கேடயம்
எட்ட நின்று பார்ப்போருக்கு- வெறும் பயம்

சிந்திப்போருக்கு இது-சிறப்பு
நிந்திப்போருக்கு- வெறுப்பு

பாய்ச்சுகின்றேன் நீரை-நெல்லுக்கு
பாய்கிறது அது-புல்லுக்கும்

புல்லும் நெல்லாகட்டும்!

முள்ளும் மலராகட்டும்-முடிந்தால் மணம் வீசட்டும்

முட்டாளும் முக்தி பெறட்டும்!

நீதி உயிர்த்தெழட்டும்!



என் வருகையை முற்றிலும் நான் நிறுத்திவிட்டால்,
என்னை தூற்றுவோருக்கும் மரணம் தான்
என்பதை நீ அறிவாயோ?" என்றது.

மண்டிட்டு மன்னிப்பு கேட்டு விட்டேன் மனம் மாறி
உன்னை போல வாழ வரம் தா என்றேன்.
உன் மனம் உன் கையில் என்றது!

# ஆசை

மனிதன் கால்படாத மண்ணில் நான் கால்
பதிக்க வேண்டும்!
மண்ணில் நான் உதித்த நாள் முதல் மீண்டும் வளர
வேண்டும்!
மனம் முழுவதும் நிம்மதி நிலைப் பெற வேண்டும்!
மாற்றானை வஞ்சிக்க தெரியாத நல்லோர் மட்டும்
அங்கு உதித்திட வேண்டும்!
மனம் மகிழ தினம் உரிமையோடு உழைத்திட
வேண்டும்!
உண்ணும் உணவும் என் உழைப்பால் உருவாகிட
வேண்டும்!
இறுதி வரை என் இதயம் இனிமையாக துடிக்க
வேண்டும்!
மீண்டும் துடிக்க என் இதயம் ஏங்கிட வேண்டும்!
நிறைவேறிட வேண்டும் என் ஆசை கனவிலாவது!

# புது வருடம்

வருடங்கள் பல மாறி வந்தாலென்ன?
வாழ்த்து சொல்ல ஏனோ வாய்வரவில்லை!
வயது ஒன்று கூடுகிறது; அது வளர்ச்சிதான்
வருத்தமும் கூடுகிறதே; என்ன சொல்லி வாழ்த்த?
வாழ்த்து உன்னை கரை சேர்க்காது-உன்
வாழ்க்கையை நீ தரமாக்காதவரை!
வளமானவர்களுக்கு வருடம் என்னவோ
புதிதுதான்!
வறுமையானவர்களுக்கு வயிற்றுக்கு என்னவோ
வறட்சிதான்!
வருடங்கள் பல வந்தாலென்ன? வரட்டும் சமநிலை
வாழ்த்தலாம் அப்போது மனதார!

# கடவுளுக்கும் சங்கு

கடவுள் இன்னும் கண்முன் வாராததால்தான்
அவனுக்கும் மரியாதை- இங்கு!
வந்துவிட்டால் அவனுக்கும் காத்திருக்கு சங்கு!



# புயலென புறப்படு

மறக்க முடியாததை மன்னித்துவிடு!

மன்னிக்க முடியாததை மறந்துவிடு!

அன்பை மட்டும் அணிகலனாக
மாட்டிக்கொள்-

பாதிப்பு உனக்கு மட்டும்தானென்றால்!

துன்பம் பாரத சமுதாயத்திற்கென்றால்-
துணிவுடன் தண்டித்துவிடு தர்மத்தின்படி!

சற்றும் அசராமல் சுட்டெரித்து விடு
சட்டத்தின்படி!

தீப்பிழம்பாய் சுழன்று வா! சுட்டெரிக்கும்
விழியுடன் புயலென புறப்படு!

அநியாயங்கள் அச்சத்தில் அழியட்டும்!

# தலைவர்கள்

தலைவர்களுக்கு பஞ்சமில்லை-ஆனால் ஏனோ
தலைமுறைகள் சிறக்கவில்லை.

நீதிமன்றங்களுக்கு பஞ்சமில்லை-ஆனால் ஏனோ
நீதிக்கு பஞ்சம் இங்கு!

சட்டங்களுக்கு பஞ்சமில்லை-ஆனால் ஏனோ
சத்தியமே காணவில்லை!

ஏகப்பட்ட திட்டங்கள்-ஆனால்
குறைந்தபாடில்லை குற்றங்கள்!

வெறும் பேச்சிற்கும் பஞ்சமில்லை-
பொய்சாட்சிக்கும் பஞ்சமில்லை!

சொல்லி அழ யாருமில்லை-ஆண்டவனுக்கும்
அர்த்தமில்லை!

எங்கு செல்வேன்? எப்படி வாழ்வேன்?



# கல்லறை

காலியாக இருந்தது எனது மூளை-நான் பிறந்த
போது!
கள்ளமில்லா சிரிப்பு மட்டும்தான் என் உடைமை-
அப்போது!
காலம் என்னை கட்டாயப்படுத்தியது-
கற்றுக்கொண்டேன் பலவற்றை!
காலியாயிருந்த மூளையில் பலவிசயங்களை இரா
பகல் பாராமல் படித்து பதிவுச்செய்தேன்.
அற்புதங்களை பதிவுச்செய்தேன்- பல
அதிசயங்களை பதிவுச்செய்தேன் -பல பல
இரகசியங்களையும் பதிவுச்செய்தேன்!
ஒவ்வொரு வினாடியும் என் அறிவையும்,
என்னையும் மெருகேற்றினேன்.
காசு சம்பாதிக்கும் வித்தைகளை கற்றுத்
தேர்ந்தேன்!
காலம் முழுவதும் காவல்காத்து மெருகேற்றிய என்
மூளை-கடைசியில் கல்லறையில்
அடைக்கப்பட்டது-காலணாவிற்கு கூட
பயனில்லாமல்!
தீபம் அணைவதற்குள்; பல தீபங்கள் ஒளி
வீசட்டும்!

# அர்த்தமில்லை

நாட்டில் நோய்களே இல்லையென்றால்
மருத்துவருக்கு-உணவில்லை!

நாட்டில் முட்டாள்கள் இல்லையென்றால்-
சாமியார்களுக்கு உணவில்லை!

ஊரிலே உரிமைகளை விற்போர்
இல்லையென்றால்-அரசியல்வாதிகளுக்கு
வாழ்க்கை இல்லை!

அடித்துக்கொள்ளவில்லை என்றால்
காவல்துறைக்கு யோகமில்லை!

நாட்டில் அநீதி இல்லையென்றால்
நீதிமன்றத்திற்கு அர்த்தமில்லை!

இவர்கள் வாழ, நாட்டில் அநீதியும்,
அநியாயங்களும் நிலைக்க வேண்டுமென்றால்
வாழ்க்கைக்கே அர்த்தமில்லை!



# இதயத்தில் இடி

இளைய சமுதாயத்தை நினைத்தால்-இதயத்தில்

இடி விழுந்தாற்போல இருக்கிறது!-

இமைகளோ கண்ணீரில் நனைகிறது!-இருந்தும்

அறிவாளிகளென மார் தட்டும்-பல ஆசிரியர்களும்,

பெற்றோர்களும் அ.்.றினையாய் அலைவது ஏனோ!

அவர்களை நினைக்கையில் அடிவயிறும்

கலங்குகிறதே!-மாதா, பிதா,குரு,தெய்வம் என்பது

மாறிப்போய் மது,மாது,தெரு,ஐயம்,அராஜகம்-

பின்னால் செல்லும் இன்னால் மாணவர்களை-

என்னால் கண்டும் காணாமலிருக்க

முடியவில்லையே!

நான் என் செய்வேன்!

# பிடித்ததைச் செய்

கடிகாரத்தை வெட்டியாய் வேடிக்கைப் பார்த்தேன்

யுகமாய் நகர்ந்தது அந்த ஒரு மணிநேரம்.

எனக்கு பிடித்த உள்ளத்தோடு உருக்கமாய்

பேசினேன் – ஒரு நாள் ஒரு நிமிடமாய் கரைந்தது.

அதே கடிகாரத்தை பார்த்து– முழித்தேன்

பிடித்ததை செய்–நடித்தது போதும் –என்று

கேலியாய் சிரித்தது!– நடிப்பதை

நிறுத்திவிட்டேன்!

பிடித்ததை செய்கின்றேன்!



# பரிசு

பிறப்பிலே மனிதனாக பிறப்பது–சிறப்பு!
இதில் நீ சொல்ல முடியாது –மறுப்பு!
இருந்தாலும் இந்த பிறப்பினிலே ஏனிந்த–வெறுப்பு!
மனிதனுக்கு கிடைத்த அற்புதம்–சிரிப்பு!
ஆயினும் வார்த்தைகளில் கலந்திருக்கு–நெருப்பு!
எங்கு நோக்கினும் பிறர் உரிமைகள்–எரிப்பு!
மாற்றான் சொத்து–பறிப்பு!
மூடர்கள் பார்வையில் ஒருவித முறைப்பு!
நடத்தையிலே விலங்குகளை போல ஒரு விரைப்பு!
பரந்திருக்கு உலக –பரப்பு!
உனக்கேன் இந்த ஈன பொழப்பு!
உயர்வை தருவது–உழைப்பு!
எங்கு பார்த்தாலும் காண வேண்டும் பசும் வயல்–
வரப்பு!
பிறரிடம் கையேந்தவா இந்த–பிறப்பு!
துணிவற்றவர்களை ஏமாற்ற ஏழையென்ற பெயர்–
திணிப்பு!
கலையாமல் செல்கிறான் ஒருவன் அவன்
ஆடைகளின்– மடிப்பு!
உண்ண உணவில்லாமல் அங்கே ஒருவன்
பட்டினியால்–தவிப்பு!

# தேர்வு

பிறந்ததும் ஆரம்பித்தது-தேர்வு!

ஆரோக்கியத்தில்-தேர்வு!

பள்ளியில் சேர்க்க தேர்வு!

பள்ளி படிப்பினிலே தேர்வு!

பணிக்கு செல்ல தேர்வு!

மேலும் பதவி உயர்வு பெற தேர்வு!

அப்பதவியை காப்பாற்றிக்கொள்ள சமுதாயத்தால்
வைக்கப்படும் தேர்வு!

திருமணம் செய்வதிலே ஒரு தேர்வு!

செய்த திருமணம் நிலைக்க வேண்டுமென்றால்
அதுவும் ஒரு தேர்வு!

பிள்ளைகளை பெற்றெடுப்பது ஒரு தேர்வு! பெற்ற
பிள்ளைகளை வளர்த்தெடுக்க தேர்வோ தேர்வு!

தொடரும் தேர்வுகள் இவ்வுலகத்திலிருந்து
தொலைந்தாலும்!

ஆனால், முழு தேர்ச்சி பெறும் நாளை மட்டும்
இதுவரை கண்டதில்லை யாரும்!



# எங்கு செல்வேன்?

எனக்கு அநியாயம் இழைத்தானென்று-
வழக்கு தொடர்ந்தேன்!

கடுமையாக வாதம் செய்தேன்;

என் உரிமைக்காக போராடினேன்!

அரிய சட்டப்பிரிவுகளை அற்புதமாய்-
சமர்பித்தேன்!-

நீதிபதியின் சட்ட மீறல் அனுகுமுறையை
நான் அனுமதிக்க மறுத்தேன்!

அந்தோ பரிதாபம்! நீதிபதியும் என்னை
எதிரியாக பார்த்தால் நான் எங்கே
செல்வேன்?

# கேவலம்

ஏற்ற தாழ்வில்லா நிலை வேண்டுமென்று ஏங்குதே-
என் மனம்!

நல்ல மனிதர்களை தேடுகிறேன்- தினம்

யாரிடமும் காணவில்லை அந்த நல்ல-குணம்!

எல்லோருக்கும் ஒரே நோக்கம்-பணம்!

சிந்திக்க மறுக்கின்றனர்-ஒரு கனம்!

நினைத்தால் இரத்தத்தில் பரவுதடா-சினம்!

உள்ளம் முழுக்க ஆறாத ரணம்!

இப்படியும் கேவளமாய் வாழலாமோ இந்த -ஜனம்!

வேண்டாம் இந்த மனித மணம்- தஞ்சமடைய
நினைக்கும் இடமோ -அடர்ந்த வனம்!

# என்ன பயன்?

சட்டங்கள் சத்தியத்தை உரைத்து என்ன பயன்?

அதை செயல்படுத்த நியமிக்கப்பட்டவன் யோக்கியனாக

இல்லாதவரையில்!



# நீண்ட கனவு

நீண்ட கனவொன்று -கண்டேன்!

காணும் இடமெல்லாம் பசுமையை-கண்டேன்!

கண்ணுக்கெட்டும் தூரம் வரை கவலையில்லா

மக்களை கண்டேன்!

பசியை அறியாத பவித்தரமான உலகை-

கண்டேன்!

அன்பிற்கு பஞ்சமில்லா அற்புத உலகை

ஆச்சரியத்துடன் கண்டேன்!

சோம்பேரிகளில்லா சொர்க்க பூமியை கண்ணார

கண்டேன்!

ஈபவனும், ஈயென இரப்பனும் இல்லா நிலையை

இனிதே கண்டேன்!

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க கண்டேன்!

பொறாமைகளும், பொல்லாப்புகளும் சொல்லாமல்

கொள்ளாமல் ஓட கண்டேன்!

தோல்விகளேயில்லாத பள்ளி படிப்பை கண்டேன்!

நீதிமன்றங்களுக்கு அவசியமில்லாமல் இழுத்து

மூட கண்டேன்!

பிறர் உழைப்பில் சுகமாய் வாழும் சோம்பேரி
சாமியார்களை சத்தியமாய் காணவில்லை!
அற்புதமான தலைவர்களை அரியணையில்
கண்டேன்!
கண்விழித்து பார்த்தேன்-கண்களில்
கண்ணீரை மட்டும்தான் கண்டேன்!

# இந்திய கூடு

இந்தியக் கூட்டிலே-ஏற்கனவே கூறிச் சென்றனர்-
பாட்டிலே!

அழியுதடா மனிதாபிமானம்-போட்டியிலே!

எவ்வளவோ சொல்லியாச்சி-ஏட்டிலே!

மிருகங்கள் அலைவதென்னவோ-காட்டிலே!

எப்படி சாத்தியம் அது மனித உருவில் நாட்டிலே!

எத்தனை வேதனையடா-வீட்டிலே!



ஏற்கனவே கூறிச் சென்றனர்-பாட்டிலே!

தெய்வமடா அவனுக்கு மது-பாட்டிலே!

அரசாங்கமே அசிங்கமாக விற்குதடா மதுவை-
இந்நாட்டிலே!

பேதை மனிதன் கழிக்கின்றான் நேரத்தை சூதாட்ட
சீட்டிலே!

பிள்ளை குட்டி பட்டினியால் சாவுதடா-வீட்டிலே!

நீ நடுவீதியில் பட்டினியால் அமர்ந்து விடு

அதுதான் உண்ணாவிரதம்-இந்நாட்டிலே!

நம் இந்தியக் கூட்டிலே எவ்வளவு அக்கறை
உனக்கு-சோற்றிலே!

ஆனால்- உழைக்க மட்டும் மறுக்கிறாயே-
வயற்காட்டிலே!

நாயோடு படுத்துறங்கும் மனிதன் -இங்கு ரோட்டிலே!

அங்கும் படுக்க கூடாதென அடித்து விரட்டினான்-
காக்கிச் சட்டை-லத்தியிலே!

பாவம் அவன்-எங்குச் செல்வான்-இச்சுடுகாட்டிலே!

நாய் தூங்க அனுமதிக்கும் -இந்நாட்டிலே!

அவன் தூங்க இடமில்லையாம்-அவனது கூட்டிலே!

எங்கே போனது அவனது வீடு இந்நாட்டிலே!